
## பாதுகாப்பாக இருங்கள்

# கடன் மோசடிகள்

கடன் வழங்கும் சேவைகள் என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் மோசடிகளில் பெரும்பாலும் விரைவான கடன்கள் அல்லது அதிக கடன் தொகைகள் போன்ற "சலுகைகள்" உள்ளடங்கும்.



## இது எப்படி நிகழ்கிறது?




- மோசடி செய்பவர்கள் பெரும்பாலும் தங்களை உரிமம் பெற்ற கடன் கொடுப்போர்களின் ஊழியர்கள் என்று போலியாகக் கூறிக் கொள்வார்கள்.
- அவர்கள் குறுஞ்செய்தி, ஐமேசேஜ் (iMessage) அல்லது வாட்ஸ்ஆப் செய்தி மூலம் எளிதில் ஏமாறக்கூடிய மக்களைக் குறிப்பின்றி அணுகலாம்.
- அதன் பிறகு, அவர்கள் கடன் தொகையை வழங்க முடிவதற்கு முன்பு ஒரு தொகையை வைப்புத்தொகையாக செலுத்துமாறு ஆர்வமுள்ள நபர்களிடம் அறிவுறுத்துவார்கள்.
- எனினும், பாதிக்கப்பட்டவர்கள் பணத்தைச் செலுத்திய பிறகு அவர்களுக்கு ஒருபோதும் கடன் தொகை விநியோகிக்கப்படாது. மேலும் மோசடி செய்பவர்களை அதன் பிறகு தொடர்புகொள்ள முடியாது.
- சில நிகழ்வுகளில், மோசடி செய்பவர்கள் உங்களின் அடையாள அட்டை, சிங்பாஸ் விவரங்கள் மற்றும் வங்கிக் கணக்கு எண்கள் போன்ற தனிப்பட்ட தகவல்களைக் கேட்கவும் முயற்சிக்கலாம்.
- உங்கள் கணக்குகளைத் தங்கள் வசமாக்க அல்லது பிற சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்கள் இந்த விவரங்களைப் பயன்படுத்தலாம்.

## நான் எதற்காக இதைத் தெரிந்துகொள்ள வேண்டும்?




சிங்கப்பூரில் கடன் மோசடிகள் – ஜனவரி-நவம்பர் 2019

- 2019 ஜனவரி முதல் நவம்பர் வரை கடன் மோசடிகள் மூலம் சிங்கப்பூரர்கள் $6.8 மில்லியன் வெள்ளி அளவுக்கு ஏமாற்றப்பட்டுள்ளனர் (த ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ் அறிக்கையின்படி).
- இந்த எண்ணிக்கை, 2018-ஆம் ஆண்டு முழுவதும் மோசடி செய்பவர்களிடம் பாதிக்கப்பட்டவர்கள் இழந்த தொகையை விட மூன்று மடங்கு அதிகமாகும்.


1 CLICK AWAY
Be Safe · Be Smart · Be Kind
MEDIA LITERACY COUNCIL
#பாதுகாப்பாக இருங்கள்
கிளிக் செய்வதற்கு முன்னர் சரிபார்க்கவும்
ஆதரவளித்தவர்:
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
SINGAPORE POLICE FORCE
NATIONAL CRIME PREVENTION COUNCIL
இவரது ஆதரவுடன்:
SG:D | GET READY!

# நான் எவ்வாறு கடன் மோசடியைக் கண்டறியலாம்?



## நீங்கள் கவனமுடன் ஆராய வேண்டிய சில விஷயங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன!

- குறுஞ்செய்தி, ஐமெசேஜ் (iMessage) அல்லது வாட்ஸ்ஆப் போன்ற செய்தி அனுப்பும் தளங்களில் கடன் சேவைகளுக்கான விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும்.
- உரிமம் பெற்ற கடன் கொடுப்போர் செய்தி அனுப்பும் தளங்கள் வழியாக விளம்பரம் செய்வது சட்டவிரோதமாகும்.







- உரிமம் பெற்ற கடன் கொடுப்போர், கடனுக்கு ஒப்புதல் அளிக்கும் முன்னர், கடன் பெறுநரின் அடையாளம் மற்றும் விவரங்களைத் தங்கள் வணிக இடத்தில் நேரில் சரிபார்க்கச் சட்டப்படி கடமைப்பட்டுள்ளனர்.
- இதை உரை செய்தி அல்லது செய்தி அனுப்பும் செயலி வழியாகச் செய்ய முடியாது.

- கடனைப் பெறுவதற்காக நிர்வாகக் கட்டணம், செயலாக்கக் கட்டணம் அல்லது பிற கட்டணத்தை செலுத்துமாறு கடன் கொடுப்போர் கோரினால் மிகவும் கவனமாக இருங்கள்.
- உரிமம் பெற்ற கடன் கொடுப்போர், கடனுக்காக விண்ணப்பம் செய்வரிடம் கடனை வழங்குவதற்கு முன்னர் பணம் செலுத்துமாறு கேட்க மாட்டார்.
- கடன் வழங்கப்பட்ட பின்னரே நிர்வாகக் கட்டணத்தை வசூலிக்க முடியும், மேலும் அவை வழக்கமாகக் கடன் பெறுநர் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையில் சேர்க்கப்படும்.




#பாதுகாப்பாக இருங்கள்

கிளிக் செய்வதற்கு முன்னர் சரிபார்க்கவும்

1 CLICK AWAY
Be Safe · Be Smart · Be Kind

MEDIA LITERACY COUNCIL


ஆதரவளித்தவர்:

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
SINGAPORE POLICE FORCE
NATIONAL CRIME PREVENTION COUNCIL

இவரது ஆதரவுடன்:


SG:D | GET READY!

# கடன் மோசடிகளில் இருந்து என்னை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளலாம்?



## கடன் மோசடிகளில் இருந்து உங்களை நீங்களே பாதுகாத்துக்கொள்ள முடிவதற்கான சில வழிகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

- குறுஞ்செய்தி, ஐமேசேஜ் (iMessage) அல்லது வாட்ஸ்ஆப் போன்ற செய்தி அனுப்பும் செயலிகள் வாயிலாக நீங்கள் பெறும் கடன் சேவைகளுக்கான விளம்பரங்களைப் புறக்கணியுங்கள். மேலும் அவற்றுக்குப் பதிலளிக்க வேண்டாம்.
- நீங்கள் தொடர்பு கொள்ளப்பட்ட செய்தி அனுப்பும் செயலியில் உள்ள தனியுரிமை அமைப்புகளைப் பயன்படுத்தி, அந்த எண்ணைத் தடைசெய்து, ஸ்பேம் (வேண்டாத அழைப்பு) என்று புகாரளிக்கவும்.








- சட்ட அமைச்சின் கடன்கொடுப்போர் பதிவகத்தில் பட்டியலிடப்பட்டுள்ள உரிமம் பெற்ற கடன் கொடுப்போரின் சேவைகளை மட்டுமே பயன்படுத்திக் கொள்ளுங்கள்: https://rom.mlaw.gov.sg/information-for-borrowers/list-of-licensed-moneylenders-in-singapore/.

- சரிபார்க்கப்படாத ஆதாரங்களுக்கு உங்களின் அடையாள அட்டை எண், சிங்பாஸ் அல்லது வங்கிக் கணக்கு விவரங்கள் உள்ளிட்ட உங்களின் தனிப்பட்ட தகவல்களை (தகுந்த காரணமின்றி) கொடுக்க வேண்டாம்.
- மோசடி செய்பவர்கள் உங்கள் கணக்குகளை அணுகுவதற்கு, மோசடி செய்து பொருட்களை வாங்குவதற்கு அல்லது உங்களைப் போல் நடித்து ஆள்மாறாட்டம் செய்வதற்கு இந்த விவரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




1 CLICK AWAY
Be Safe · Be Smart · Be Kind

MEDIA LITERACY COUNCIL

#பாதுகாப்பாக இருங்கள்

கிளிக் செய்வதற்கு முன்னர் சரிபார்க்கவும்

ஆதரவளித்தவர்:
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
SINGAPORE POLICE FORCE
NATIONAL CRIME PREVENTION COUNCIL

இவரது ஆதரவுடன்:
SG:D | GET READY!